(ஐ) கோரிக்கை எண். 58.

மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவை முன்னுள்ள கேள்வி – ''மானியக் கோரிக்கை எண்.58 – மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,14,43,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரியத்தொகை வழங்கப்பெற்றது''.

(ஓ) கோரிக்கை எண். 8.

தேர்தல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி – ''மானியக் கோரிக்கை எண். 8 –தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 21,76,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(ஓ) கோரிக்கை எண். 44.

எழுது பொருள்–அச்சுத்துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி ''மானியக் கோரிக்கை எண். 44 – எழுதுபொருள்–அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,23,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்'',

மானியக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

7. அறிவிப்பு.

நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டுநிதி ஒதுக்க (எண் 3.) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் தமது இசையைத் தெரிவித்துள்ளார்.